# கழுகின் சத்தம்

## மார்ச் 18, 2024

1



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்திகளிலிருந்து

ஆனால் நமக்கு ஒரு காரியம் பொதுவாயிருக்கின்றது. சகோதரர்களே, அது கிறிஸ்துவாகும்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 64-02-06B நம்பமுடியாதது ஆனாலும் உண்மை

17. இக்காலை நேரத்தில் நாம் நம்மை தேவ கூட்டு சபையாக மட்டுமோ, பரிசுத்த பெந்தெகொஸ்தேயினராக மட்டுமோ, அல்லது ஒன்றுபட்ட சபைகளாக மட்டுமோ கூடியிருக்க முயற்சிக்கக் கூடாது. அவ்வித மாக நாம் ஒருபோதும் செய்ய முடியாது.

18. ஆனால் விசுவாசிகளாகிய நாமெல் லாரும் கூடத்தக்கதாக ஒரே ஒரு இடம் தான் உண்டு; அது இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் கீழேயாகும். ஆகவே தேவன் மனிதனை சந்தித்த அல்லது சந்திக்கப் போகின்ற இடம் ஒன்று மாத்திரமே இருக்கின்றது. அது இயேசுகிறிஸ்துவின்

இரத்தத்தின் கீழேயாகும். அங்கேதான் நாம் பொதுவான காரியங்களை உடையவர்களாக இருக்கின்றோம்.

19. சமீபத்தில் ஒரு இளம் தம்பதியினரின் விவாகரத்து காரியத்தைக் குறித்து நான் படித்துக் கொண்டிருந்தேன். அது ஒரு பரிதாபத்துக்குரிய காரியமாக இருந்தது. அவர்கள் அநேக வருடங்கள் ஒன்றாக வாழ்ந்திருந்தனர். அவர்களுக்குள் கருத்து வேற்றுமை ஏற்பட்டதினால் அவர்கள் விவாகரத்து செய்துக்கொள்ள தீர்மானித்தார்கள். அப்பொழுது அவர்கள். வழக்கறிஞர் அவர்களுடைய நண்பராய் இருந்தார். அவர், "இப்பொழுது, நீங்கள் விவாகரத்தைப் பெற்றுக் கொண்டால், இந்த பொருட்களை விற்க யாராவது ஒருவரைத் தேட வேண்டியதாய் இருக்கும். ஆதலால் உங்களுக்கு எது தேவையாய் இருக்

கின்றதோ அதை உங்களுக்குள் பகிர்ந்து எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று கூறினார். அதைச் செய்வதாக அவர்கள் கூறினர். ஆகவே அவர்கள் சம்பாஷிக்கும் அறைக் குச் சென்றனர். பரபரப்பாய் இருந்தனர். அங்குள்ள ஒவ்வொரு பொருள்களின் மேலும் அவர்கள் உரிமைக் கொண்டாடி சண்டைப்போட்டனர். பின்பு அவர்கள் வாழும் அறைக்கும், சாப்பிடும் அறைக்கும் சமையலறைக்கும் சென்றனர். எல்லா இடத்திலேயும் அதே காரியத்தைதான் செய்தனர்.

20. கடைசியாக மேல் மாடத்தில் சில பொருட்களை சேமித்து வைத்திருப்பதை ஞாபகம் கொண்டனர். ஆகவே அவர்கள் இருவரும் அந்த இடத்திற்கு சென்று உச்சி மேல் மாடி அறைக்கு (garret) சென்றனர். இங்கே இதை இவ்விதமாகக் கூறுகின்

றீர்கள் என்று நான் யூகிக்கின்றேன் (காரட் - garret - தமிழாக்கியோன்) கிழக்கில் நாங்கள் அதை அட்டிக் (Attic) என்று அழைப்போம். ஆகவே அவர்கள் அந்த இடத்திற்குச் சென்று அங்கிருந்த ஒரு பழைய பெட்டியை எடுத்தனர். அதில் சில துணிகளையும், பொருட்களையும் அவர் கள் வைத்திருந்தனர். ஆகவே அவர்கள் இதைக் குறித்தும் அதைக் குறித்தும் பரபரப்பாய் கை நீட்டி இழுத்துக் கொண் டிருந்தனர்.

21. ஆகவே சிறிது நேரம் கழித்து, ஏதோ ஒன்றை இருவரும் கைகளை நீட்டி எடுக்க முயற்சித்தனர். அப்பொழுது அதை இருவரும் பிடுங்கிக் கொள்ள முயற்சித்த போது இருவருடைய கரங்களும் பிணைந்து கொண்டன. அவர்கள் எடுத்த பொருள் ஒரு ஜோடு சிறிய வெள்ளைக்

காலணிகள். அந்த வெள்ளைக் காலணிகள் அவர்களுடைய இணைப்பிற்கு கொடுக்கப்பட்ட, ஆனால் மரித்துப் போன குழந்தையின் காலணிகளாக இருந்தன. அங்கே அவர்கள் ஒருவருடைய கரங்களை ஒருவர் பிடித்துக் கொண்டு, ஒருவர் "இது என்னுடையது" என்று கூறமுடியவில்லை. மற்றொருவரும் "இது என்னுடையது" என்று கூறமுடியவில்லை. ஏனெனில் அவர்கள் இருவருமே கொண்டிருந்த ஒன்றாக அது இருந்தது. ஒரு சில நிமிடங்கள் அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றனர். ஏனெனில் அவர்கள் இருவரும் தனித்தனியே அதை உரிமை கூற முடியவில்லை. ஆகவே அவர்கள் இருவரும் ஒருவர் கரங்களில் ஒருவர் என அணைப்பிற்குள்ளாகினர்.

விவாகரத்து என்னும் காரியத்திற்கு அங்கு இடமில்லாமல் தள்ளுபடியாயிற்று.

22. நீங்கள் இதைக் காண வேண்டுமென்று விரும்புகிறேன். நாம் பாப்திஸ்துகளாகவோ, மெத்தோடிஸ்டுகளாகவோ, தேவகூட்டுசபையாகவோ, தேவ சபை என்று எவ்விதமாகவோ இருக்கலாம். நாம் வித்தியாசப்பட்ட காரியங்களை உடையவராயிருக்கலாம். ஆனால், நம்முடைய பாரம்பரியங்கள் நம்மை அவைகளுக்குட்படுத்திவிட்டன. ஆனால் நமக்கு ஒரு காரியம் பொதுவாயிருக்கின்றது. சகோதரர்களே, அது கிறிஸ்துவாகும். அவரே வார்த்தையாயிருக்கிறார். அதைத்தான் நாம் இங்கு செய்ய வேண்டியவர்களாய் இருக்கின்றோம். நம்முடைய வித்தியாசப்பட்ட கருத்துக்களைப் பற்றி பேச அல்ல, மாறாக இயேசு கிறிஸ்து என்னும்

பொதுவானவரைக் குறித்தே நாம் பேச வேண்டும்.



# என்னே, கர்த்தருடைய வருகை, முடிவு காலம் என்பது மிகவும் மகிமையான ஒரு தருணம்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

"தீர்மானம்" என்பது இன்று பெரிய சொல்லாக அமைந்துள்ளது. ஒரு சபை யைச் சேர்ந்து கொள்வதற்கு பதிலாக தேவனை சேவிக்க யாராகிலும் தீர்மானம் செய்வதை நான் விரும்புகிறேன். தீர் மானம் செய்து உள்ளே வந்து, புத்தகத்தில் உங்கள் பெயரை பதிவு செய்து கொள் ளுங்கள். ஒரு பெரிய கூட்டம் ஜனங் களையே அவர்கள் அங்கு அனுப்பு கின்றனர். "உன் பெயர் என்ன?''

''ஜான் ஜோன்ஸ்''. ''கிறிஸ்துவை உன் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறாயா?'', "ஆம்'' சாத்தானும் அப்படியே விசுவாசிக்

கிறான். அவனும் அதையே செய்கிறான். அவன் அப்படி செய்வதாக வேதம் கூறு கின்றது. அவன் விசுவாசித்து நடுங்குகின் றான், (யாக். 2:16) ஆம், ஐயா.

108. ஆனால் நீங்கள் உண்மையாக விசுவாசித்தால் நடுங்கமாட்டீர்கள். நீங்கள் களிகூருவீர்கள். ஆமென். “அவர் பிரசன்ன மாகுதலை விரும்பும் யாவரும்''.

ஒருவர் எனக்கு தொடர்ச்சியாக ”சகோ. பிரன்ஹாமே, முடிவு காலம் வருகிற தென்று கூறி, ஜனங்களை பயமுறுத்து கின்றீர்கள்“ என்று கடிதம் எழுதிக்கொண் டிருக்கிறார் என்று நான் உங்களிடம் ஏற் கனவே கூறியுள்ளேன், சபையை பயமுறுத் துவதா?

என்னே, கர்த்தருடைய வருகை, முடிவு காலம் என்பது மிகவும் மகிமையான ஒரு தருணம்.

அது இப்பொழுதே நிகழ்ந்தால் நலமா யிருக்கும். நிச்சயமாக.

என் கர்த்தரை சந்திப்பதென்பது மிகவும் மகிமையான ஒரு காரியம்.

இந்த வயதான மாம்ச வஸ்திரத்தை நான் களைந்து, எழும்பி மேலே சென்று நித்திய பரிசைப் பெற்றுக் கொண்டு, ஒரு வாலிப னாக மாறி, என் கர்த்தரோடும் என் ஜனங் களோடும் நித்திய காலமாய் வாழுவேன்.

என்னே ! பூச்சி அரிக்கக்கூடிய இந்த பழைய வீட்டில் இருந்து கொண்டு, இந்த பாவம், சோதனைகள் வேதனைகள் வலிகள் இவைகளினால் கஷ்டப்பட நான் விரும்ப வில்லை.

**இவைகளை விட்டு சென்று நீதியின் கிரீடத்தைப் பெற்றுக் கொள்ளுதல் என்பது நான் இதுவரை கேட்டிராத மிகவும் மகிமை யான ஒரு காரியம்.**

அப்போஸ்தலனாகிய பவுல் கூறின விதமாக, ”நல்ல போராட்டத்தைப் போராடி னேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத் தைக் காத்துக் கொண்டேன், இது முதல்... விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக் கப்பட்டிருக்கிறது. நீதியுள்ள நியாயாதி பதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திர மல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும் பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்'' (2 தீமோ. 4:7-8).

அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும். அவர் வருகிறார் என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. நிச்சயமாக. ஆம், ஐயா.



# அமெரிக்காவில், நீ அதிகமாக காரியங்களைச் செய்தால், இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 56-0513, மோசேயைக் குறித்த போதனை

*__2.__ சில காலத்திற்கு முன்னர் இங்கு ஒரு சிறிய தாளை நான் படிக்க எடுத்தேன். ஒருவேளை இதற்கும் அதற்கும் சம்பந்தம் இராது.*

*இங்கே கென்டக்கியிலுள்ள ஒரு அரசியல்வாதியைக் குறித்து அதில் இருந்தது.*

*அந்த நபர் இராணுவத்தில் இரு முறை இருந்து, மூன்று முறை காயப் பட்டு, ஒரு புகழ் வாய்ந்த போர் வீரனாக இருந்தார்.*

*அவர் குடி கொண்டிருந்த இடத்தில் இரண்டு சிறு பிள்ளைகளுடைய*

உயிரைக் காப்பாற்றினார், மலைகளுக் கிடையே உள்ள ஒரு சமவெளியிலிருந்து ஒரு பிள்ளையையும், மற்ற ஏதோ ஒன்றி லிருந்து ஒரு பிள்ளையும் காப்பாற்றி னார்.

இன்னும் மற்ற அநேக காரியங் களையும் அவர் செய்திருந்தார்.

ஆனால் அவர் செய்தவையெல்லாம் மறக்கப்பட்டு விட்டது.

ஆகவே கடைசியாக நல்லது, தான் தங்கியிருந்த சுற்று வட்டாரத்தை சரி யான முறையில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று எண்ணி, ஒரு பதவிக் காக போட்டியிட்டார்.

அவ்வாறு அவர் போட்டியிட்ட போது, ஒரு இலட்சம் மக்களில் ஐந்து வாக்குகள் மாத்திரமே அவர் பெற்றார்.

ஆகவே அவர் “இங்கு வாழ்வதே மிகவும் ஆபத்தானது” என்று கூறி அந்த சுற்று வட்டாரத்தை விட்டு குடிபெயரத் தக்கதாக சபையிடம் தனக்கு ஒரு சிறிய துப்பாக்கி கிடைக்குமா என்று கேட்டார், அவர் குடிபெயர்ந்து செல்ல உதவி செய்ய அவருக்கு போதிய நண்பர்கள் இல்லாதிருந்தனர்.

அது தான் அமெரிக்காவின் நன்றிக் கடன், அப்படித்தானே? அது சரி.

அமெரிக்காவில், நீ அதிகமாக காரியங்களைச் செய்தால், இன்னும் அதிகமாகச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அது சரி, உன்னிடத்தில் அதிகமாக எதிர்பார்க்கப்படுகிறது.

# இயேசு நற்பண்பு படைத்தோரை (Character) கணக்கில் கொள்கிறாரேயன்றி அங்கத்தினர்களை அல்ல. அது உங்களுக்குத் தெரியுமா?



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

இயேசு நற்பண்பு படைத்தோரை (Character) கணக்கில் கொள்கிறாரேயன்றி அங்கத்தினர்களை அல்ல. அது உங்களுக்குத் தெரியுமா?

அவர் நற்பண்பு படைத்தோரை கணக்கில் எடுக்கிறார்.

தேவன் எப்பொழுதுமே ஒரு மனிதனை தமது கரத்தில் கொள்ள முயன்று வந்திருக்கிறார்.

அவருக்குத் தேவையெல்லாம் ஒரு மனிதனே.

அவர் தமது கிரியைகளை அநேக ஆண்டுகளாக அவ்விதம் செய்து வருகிறார்.

சற்று யோசித்து பாருங்கள்.

நோவாவின் காலத்தில் அவரால் ஒரே ஒரு நீதிமானை மாத்திரமே காணமுடிந்தது.

மோசேயின் காலத்திலும் அவர் ஒரு நீதிமானை மாத்திரமே கண்டார்.

சிம்சோனைப் பாருங்கள். பாருங்கள், நீங்கள் தேவனிடம் சமர்ப்பிப்பதை மாத்திரமே அவரால் உபயோகிக்க முடியும்.

சிம்சோன் பலசாலியாயிருந்தான். அவனுக்கு நிறைய பலம் இருந்தது. அவன் தன் பலத்தை தேவனிடம் சமர்ப்பித்தான்.

ஆனால் அவனுடைய இருதயத்தையோ அவன் கொடுக்கவில்லை, அவன் தெலீலாளுக்கு தன் இருதயத்தைக் கொடுத்தான். பாருங்கள்?

இன்றைய மக்களும் அவ்வாறேயுள்ளனர். ஓ, சகோதரனே, அவர்கள் உதவி செய்து கடன்களைத் தீர்ப்பார்கள், அப்படிப்பட்ட காரியங்களைச் செய்வார்கள், ஒருபெரிய ஸ்தாபனத்தைக் கட்டுவார்கள் ஆனால் இருதயத்தை கொடுக்கும் விஷயத்தில், அவர்கள் அப்படி செய்ய மறுக்கின்றனர். அது உண்மை. அதனால் என்ன பயன்...

சகோதரனே, இன்று காலை
உன்னிடம் ஒன்றைக் கூற
விரும்புகிறேன். நீ பாடுபடாதே,
நானும் பாடுபட மாட்டேன்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள்
பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 60-12-18 விளங்காத சத்தம்

440. முடிக்கும் தருணத்தில், இரட்சிப்புக்கும் சுகம் பெறுதலுக்கும் இந்த வார்த்தைகளை ஒரு நிமிடம் கூற விரும்புகிறேன்.

441. பால் ராடேர் என் நண்பர். அவரை சிறிது காலமாக நான் அறிந்திருந்தேன். நான் பையனாக அவருடைய பாதங்களில் உட்கார்ந்திருக்கிறேன், பெரிய ஊழியக்காரரர். அண்மையில் அவர் கலிபோர்னியாவில் காலமானார். அவர் மரிக்கும் தருவாயில்... அவருக்கு புற்று நோய் உண்டாகி, கலிபோர்னியாவில் மரணத் தருவாயில் இருந்தார். இப்பொழுது ஓ.எல். ஜாகர்ஸ், வைத்துள்ள

கூடாரத்தை அவர் முன்பு வைத்திருந்தார். அப்பொழுது அதன் பெயர் என்னவென்று மறந்து விட்டது, இப்பொழுது அது உலக சபை என்றழைக்கப்படுகிறது. பால் ராடே ரின் பழைய கூடாரம், அது எல்டராடோ தெருவைத் தாண்டியுள்ளது, நீங்கள் அதன் வழியாக சென்று, மக்பர்ஸன் ஆலயத்தை கடந்து, பூங்காவில் உள்ளது. பால் ராடேர் அதற்கு போதகராயிருந்தபோது அவர்கள் அங்கு சென்றனர்.

442. அவர் மரிப்பதற்கு முன் தன் கரங்களை நான் நன்கு அறிந்துள்ள ஒரு சகோதரனின் தோள் மேல் போட்டு - அவர் எர்ண் பாக்ஸ்டருக்கு நண்பர் - "நான் பாப்டிஸ்டு கூட்டத்தாராகிய உங்க ளுடன் விளையாடிக் கொண்டிருந்ததற்கு பதிலாக என் கிருபையின் செய்தியை உற்சாகமுள்ள பெந்தெகொஸ்தேயினருக்கு

அளித்திருந்தால், இன்றைக்கு நான் பிழைத் திருப்பேன். ஆனால் நீங்கள் என்னைத் தொல்லைப்படுத்திவிட்டீர்கள். நான் மிகவும் சோர்வடைந்து, குழப்பமுற்று, முடிவில் இப்பொழுது மரித்துக் கொண் டிருக்கிறேன்," என்றார்.

443. அவர் படுக்கையில் அங்கு படுத்துக்கொண்டிருந்தபோது, அவர்கள் திரையை இழுத்துவிட்டு, 'உம்மண்டை தேவனே" என்னும் பாடலைப் பாடிக் கொண்டிருந்தனர். அவர் நகைச்சுவை உள்ளவர். அவர், "மரித்துக் கொண்டிருப் பது யார், நீங்களா நானா? நீங்கள் மரித்துக் கொண்டிருப்பதாக தோன்றுகிறது. அப்படி செய்யாதீர்கள். உற்சாகமான சில சுவி சேஷப் பாடல்களை எனக்காக பாடுங்கள்," என்றார். அப்பொழுது மூடி வேதாகம சங்கத்தைச் சேர்ந்த நால்வர் பாடல் குழு

“மீட்பர் மரித்த குருசண்டை” என்னும் பாடலைப் பாடினர். அவர், “இது அதைக் காட்டிலும் நன்றாயிருக்கிறது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம்” என்றார்.

444. அவர், “லூக் எங்கே?” என்றார். லூக்கும் பாலும், நானும் என் மகன் பில்லியும் இருப்பது போல், ஒன்றாகவே இருந்து வந்தனர். அவர்கள் சகோதரர், அவர்கள் ஒன்றாக இருந்தனர். அவர், 'லூக் எங்கே?” என்று கேட்டார். லூக் தன் சகோ தரன் மரிப்பதைக் காண விரும்பாமல், அந்த ஆஸ்பத்திரியில் அடுத்த அறையில் இருந்தார். அவர், “அவனை இங்கு வரும் படி சொல்லுங்கள், அவனைக் கொண்டு வாருங்கள்,” என்றார்.

445. லூக் பால் இருந்த இடத்துக்கு வந்தபோது, பால் தன் கையை நீட்டி அவர்

கையை பிடித்துக் கொண்டார். லூக் தன் தலையை திருப்பிக்கொள்ள முயன்றார். அவர், “லூக், நாம் எத்தனையோ கடினமான போராட்டங்களின் வழியாக ஒருமித்து கடந்து வந்திருக்கிறோம். இல்லையா, சகோதரனே?” என்றார்.

446. லூக், “ஆம், இத்தனை ஆண்டுகளாக நாம் ஒன்றாக பாடுபட்டோம், சகோதரனே. அது உண்மை, அநேக கடினமான போராட்டங்கள்,” என்றார்.

447. பால், “லூக், சற்று யோசித்து பார். இன்னும் ஐந்து நிமிடங்களில் நான், அவருடைய நீதியின் வஸ்திரத்தை உடுத்தினவனாய், தேவனுடைய சமூகத்தில் நின்று கொண்டிருப்பேன்” என்று சொல்லி, அவருடைய சகோதரனின் கரங்களை இறுகப் பிடித்தவரே மரித்துப்போனார்.

அதைக் குறித்து நிச்சயமின்மை எதுவுமில்லை. அவர் போகும் வழியை அவர் அறிந்திருந் தார். அவர் பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற்று, அவருடைய வாழ்க்கையில் தேவனுடைய வல்லமையைக் கொண்டிருந்ததை அறிந்திருந்தார்.

448. அவர் மரம் வெட்டுபவர். அவர் மரங்களை வெட்டுவது வழக்கம். அவர் சொன்னார்....

449. அவரும் என்னைப்போல் ஒரு மிஷனரி - நான் கடல் கடந்து செல்வதைப் போல். அவரும் லூக்கும் மற்றவர்களும் தீவுகளுக்கு சென்றிருந்தபோது, விஷ ஜூரத்தில் பீடிக்கப்பட்டனர். அது மிகவும் மோசமானது, மரணத்தை விளைவிக்க கூடியது. அவருக்கு விஷ ஜூரம் கண்டது.

அது காடுகளில், அங்கு ஒன்றுமேயில்லை. அவரும் அவருடைய அழகிய மனைவி யும் அங்கிருந்தனர். அவர் என்ன சொன் னார் தெரியுமா, அந்த வரலாற்றை உங்க ளிடம் கூறியிருக்கிறேன். “சென்ற முறை அவர் மரித்து விடுவார் என்னும் எண்ணம் அவருக்குண்டான போது, அவருடைய மனைவி முத்த மிட்டு விடை பெற்றாள்,” என்று கூறினார். எனவே அவர்கள் அங்கிருந்தனர். அந்த அறை இருட்டாகிக் கொண்டே வந்தது. அவர் போய்விடுவார் என்று நினைத்தார்.

450. அவர் மனைவியிடம், “தேனே, இங்கு இருட்டடைந்து கொண்டே வரு கிறது. நான் மரித்துக் கொண்டிருக்கிறேன்” என்றார்.

451. அவள், “ஓ, பால்! பால்!,” என்று கதறி முகங்குப்புற விழுந்து அழத் தொடங் கினாள்.

452. அவர், “தேனே அழுது கொண்டே யிரு... தேவனிடம் கதறி அழுதுகொண்டே யிரு. உன் குரலை நான் கேட்கட்டும். யாராகிலும் ஜெபியுங்கள். இனிமேல் என் னால் ஜெபிக்க முடியாது. நான் மரிக்கும் போது, அதை கேட்க விரும்புகிறேன்,” என்றார்.

453. அவள் தேவனிடம் கதறி அழுது, “ஓ, தேவனே, அவர் மரிக்க விடாதேயும். அவர் வேலை இன்னும் முடியவில்லை. ஓ, தேவனே, பாலை மரிக்க விடாதேயும்” என்று அழுது கொண்டேயிருந்தாள். அவள் இப்படி அவர் மேல் படுத்துக் கொண்டிருந்தாள்.

454. அது இருட்டடைந்து கொண்டே வந்தது. அவர், 'அன்பே, அது மேலும் மேலும் இருட்டடைந்து கொண்டே வரு கிறது" என்றார்.

455. முடிவில் அவர் கடந்து சென்றார். அவர், "நான் கடந்து சென்ற போது, நான் மீண்டும் இளைஞனாக மாறினதாக சொப் பனம் கண்டேன். நான் ஓரிகானிலுள்ள ஒரு காட்டை அடைந்தேன்," என்றார். அது தான் அவருடைய சொந்த இடம். அவர் தொடர்ந்து, 'நான் ஒரு மரத்தை வெட்டி னேன். முதலாளி என்னிடம், 'நீ மலையின் உச்சிக்கு சென்று ஒரு குறிப்பிட்ட மரத்தை வெட்டு. வீடு கட்டுவதற்கு நாம் மரம் உண்டாக்க வேண்டும் என்றார்" என்றார்.

456. அவர், "சரி, முதலாளி" என்று கூறிச்சென்றார். அவர் அவைகளை

முகர்ந்ததாகவும், அவை பச்சையாக இருந்ததாகவும் கூறினார். அவருக்கு நல் லுணர்வு தோன்றினதாம். அவர் காட்டின் வழியே இப்படி ஓடிச் சென்றாராம். அவர் கோடாரியால் வெட்டினபோது, கோடாரி யின் இரும்பு மிருதுவான தேவதாரு மரத்துக்குள் பாய்வதை உணர்ந்தாராம். உங்களுக்கு ஓரிகான் தேவதாரு மரம் தெரியும். அது உள்ளே பாய்ந்த போது..... தென் பாகத்திலும் அதே விதமான மரம் உள்ளது. ஆனால் அது கடினமானது. நீங்கள் வடக்கே செல்லும் போது, குளிர் அதிகமாகுந்தோறும் மரம் மிருதுவாகிக் கொண்டே வருகிறது. முடிவில் அவர் இரட்டை இரும்புத் துண்டை கோடாரியில் பொருத்தி, மரத்தின் எல்லா கிளைகளை யும் வெட்டி வீழ்த்தினார். அவர் கோடா ரியை அங்கு குத்தி நிறுத்தி, “மரத்தை

சுமந்து மலையின் கீழே செல்லப் போகிறேன்,” என்றார்.

457. அவர் அதை தூக்க முயன்ற போது, அவரால் தூக்க முடியவில்லை. அவர் முயன்று முயன்று பார்த்தார். அவரால் முடியவில்லை. ஒரு மனிதனின் வலுவான தசைகள் முதுகிலுள்ளவை என்று அவர் நினைவுகூர்ந்ததாகச் சொன்னார். எனவே அவருடைய தசைகள் பிளந்து போகாமல் இருப்பதற்காக, தன் முழங்கால்களை ஒன்றாக சேர்த்து, குனிந்து அதை தூக்க முயன்றார். அவர் எல்லா தசைகளின் வலிமையையும் அதில் போட்டு தூக்க முயன்றும் அவரால் முடியவில்லை. அவர் பாடுபட்டு முயன்றும் பயனில்லை. அவர், 'நான் எப்படியும் இந்த மரக்கட்டையை கீழே கொண்டு செல்லவேண்டும். என் முதலாளி

அதை கொண்டு வரும்படி எனக்குக் கட்டளையிட்டிருக்கிறார். என் பலம் என்னை விட்டு எங்கே சென்றதோ தெரிய வில்லை. என்னால் தூக்கமுடிந்தால், அதை தோளின் மேல் வைத்துக் கொண்டு நடந்து சென்றிருப்பேன். ஆனால் என்னால் தூக்க முடியவில்லையே” என்றார். அவர் எவ் வளவோ முயன்று பார்த்தும் அவரால் முடியவில்லை. அவர் களைத்துப்போனார்.

458. அவர் மரத்தின் பக்கம் விழுந்து (சகோ. பிரன்ஹாம் மூச்சு வாங்குவது போல் காண்பிக்கிறார் - ஆசி), 'நான் பாடுபட்டேன். பாடுபட்டேன். பாடுபட் டேன், பாடுபட்டேன். இனி என்னால் முடியாது. நான் எப்படியும் அந்த மரக் கட்டையை கீழே கொண்டு செல்ல வேண் டும், ஆனால் எப்படியென்று தெரிய வில்லை. என்னால் தூக்க முடியவில்லை.

என்ன செய்வதென்று தெரியவில்லை," என்று சொல்லிக்கொண்டு அங்கு உட்கார்ந் திருந்தார்.

459. அப்பொழுது அவர் ஒரு சத்தத் தைக் கேட்டார். அது அவரை "பால்' என்று அழைத்த அவருடைய முதலாளியின் குரல். அது மிகவும் இனிமையான குரலாக இருந்ததாகக் கூறினார்.

460. அவர், "நான் திரும்பி பார்த்த போது, அது என் முதலாளி அல்ல. அது என் உண்மையான முதலாளி இயேசு," என்றார்.

461. இயேசு, "பால், நீ ஏன் கஷ்டப் படுகிறாய்? அங்கு ஓடிக்கொண்டிருக்கும் ஓடையை கவனித்தாயா? அது நேராக முகாமுக்குச் செல்கிறது. நீ ஏன் மரக்

கட்டையை தண்ணீரில் தள்ளி, அதன் மேல் ஏறிச் சொல்லக்கூடாது?” என்றார்.


462. எனவே அவர் மரக்கட்டையை தண்ணீரில் உருட்டி விட்டு, அதன் மேல் குதித்து உட்கார்ந்து, சிறு அலைகளின் மேல் சென்று, “நான் அதன் மேல் ஏறிச் செல்கிறேன்! நான் அதன் மேல் ஏறிச் செல்கிறேன்!” என்று கூச்சலிட்டுக் கொண்டே சென்றார்.

463. அவருடைய உயிர் அறைக்குள் வந்தபோது, அவருடைய மனைவி அவ ருடைய உடலின் மேல் படுத்திக்கொண்டு ஜெபித்துக் கொண்டிருந்தாள். அவர், “நான் அதன் மேல் ஏறிச் செல்கிறேன்! நான் அதன்மேல் ஏறிச்செல்கிறேன்” என்று சத்தமிட்டுக் கொண்டே குதித்தெழுந்தார்.

464. சகோதரனே, இன்று காலை உன்னிடம் ஒன்றைக் கூற விரும்புகிறேன். நீ பாடுபடாதே, நானும் பாடுபட மாட்டேன். 'நான் மெதோடிஸ்டு, நான் பாப்டிஸ்டு, நான் இது" என்று அங்கும் இங்கும் ஓடுவது உங்களைக் களைப்பாக்கி விடும். நான் இயேசுவை ஏற்றுக்கொண்டேன். அவருடைய கிருபையினால் நான் அவருடைய வாக்குத்தத்தத்தை ஏற்றுக்கொண்டேன். அவர் என்னிடம் வந்தார். நான் அதன் மேல் ஏறிச்செல்கிறேன். என்ன நடந்தாலும், எத்தனை முறை நாம் 'பைத்தியக்காரர்" என்று அழைக்கப்பட்டாலும் எனக்குக் கவலையில்லை.

465. இன்று காலை நீங்கள் சுகம் பெறுதலைக் குறித்த விஷயத்தில், உங்களுக்காக ஜெபம் பண்ணப்படும்போது;

இப்பொழுது நமக்கு சிந்தனைகளைப் பகுத்தறிதலின் வரிசைக்கு நேரமில்லை. (இப்பொழுது பகல் ஒரு மணி ஆகி விட்டது). நாம் வியாதியஸ்தர்களுக்காக - இங்குள்ள ஒவ்வொருவருக்காகவும் - ஜெபிக்கப்போகிறோம். 'விசுவாசிக்கிறவர் களை இந்த அடையாளங்கள் தொடரும்" என்றார் இயேசு. அது சரியா? (சபையோர் ஆமென்' என்கின்றனர் - ஆசி). 'வியாதி யஸ்தர் மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமா வார்கள்." அது சரியா? நான் அதன் மேல் ஏறிச் செல்கிறேன். நீங்களும் அதன் மேல் ஏறிச் செல்ல ஆயத்தமா?

எனவே விலகி நில்லுங்கள், பிரிந்து வாருங்கள் எல்லோரிடமும் நல்லவர்களாயும் தயவாயும் நடந்து கொள்ளுங்கள், ஆனால் அவர்களுடைய பாவங்களில் பங்கு கொள்ளாதீர்கள். அதை விட்டு விலகுங்கள். ஆம் ஐயா



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

## செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

82. தேவன் தமது பிள்ளைகள் அவிசுவாசத்தினின்றும் அவிசுவாசிகளினின்றும் பிரிந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார். உங்களில் அநேகர் இந்த தவறைச் செய்கின்றீர்கள். சில நேரங்களில் உங்கள் பிள்ளைகளை ஆஸ்வால்டுடன் போகவிடகின்றீர்கள். பாருங்கள்? நான் வித்தியாசமாக இருக்க வேண்டும். அல்லது அகந்தையுள்ளவனாகவோ, மூட பக்தி வைராக்கியம் கொண்டவனாக இருக்க வேண்டும் என்பதற்காகவோ இதை கூறவில்லை. நான் அந்த அர்த்தத்தில் கூற வில்லை. ஆனால் நீங்கள் அனுமதிக்கி

றீர்கள். இரவு நேரத்தில் உங்கள் மகள் யாருடன் செல்கின்றாள் என்பதைக் குறித்து நிச்சயமுடையவர்களாயிருங்கள். பாருங் கள்? ஒருக்கால் அவளை நீங்கள் சபைக்கு கூட்டிச் சென்று தேவபக்தியுள்ளவளாய் வளர்த்திருக்கலாம். அவள் ஆஸ்வால்டு டனோ அல்லது வேறு யாருடனோ செல்லும் போது முதலாவதாக நிகழ்வது... அவன் ஒரு நாத்தீகனாகவோ அல்லது அவிசுவாசியாகவோ இருக்க நேரிட்டால், அவளுடைய வாழ்க்கை பாழாகிவிடும். அவன் யாரென்று உங்களுக்குத் தெரியாது. பார்த்தீர்களா? பிறகு அவன் அவளை மணந்து கொள்வான். உங்கள் பேரப் பிள்ளைகளின் நிலையென்னவென்று யோசித்துப் பாருங்கள். ஜாக்கிரதையா யிருங்கள். தேவன் தமது ஜனங்கள்

அவிசுவாசிகளை விட்டு பிரிந்திருக்க வேண்டுமென்று விரும்புகிறார்.

83. நீங்கள் யாத்திராகமம் 4:12 ஐப் படித்து தேவன் இஸ்ரவேலரிடம் என்ன கூறினாரென்று பாருங்கள்; "நீ அந்த தேசத்தில் போய் சேரும்போது அங்குள்ள எல்லாவற்றையும் அகற்றி சுத்திகரித்து விடு. அவைகளுடன் எவ்வித தொடர்பும் கொள்ளாதே'' யோசுவா 23:12ம் கூட. யோசுவா என்ன சொன்னான் என்று கவனியுங்கள்: "தேவன் உங்களை இந்த நல்ல தேசத்துக்கு அழைத்து வந்தார்" - சபைக்கு அவர் செய்தது போல். "அவர் உங்களை இந்த நல்ல தேசத்துக்கு அழைத்து வந்தார். அதை நீங்கள் அனுபவிக்கிறீர்களா?''

அவர்கள், ''ஆமென், நாங்கள் அனுபவிக்கிறோம்'' என்றனர்.

அவன், இங்கு சில மீதியாயிருக்கிற ஜாதிகள் - அவிசுவாசிகள் - உள்ளனர். அவர்களுடன் சம்பந்தங் கலவ வேண்டாம். அவர்களுடன் போக வேண்டாம் என்றான்.சகோதரியே, அப்படி செய்யாதே. அந்த பையன் நட்பு குடிக்காக (friendly drink) உன்னை எங்காவது மதுவிற்கும் ஸ்தலத்திற்கு கொண்டு சென்றால், அவனை விட்டு விலகு! பையன்களே, பெண் அப்படி செய்வாளானால் நீங்களும் அவ்வாறே அவளை விட்டு விலகுங்கள்!


நீங்கள், சகோ.பிரன்ஹாம் ஒரு கிழப் பைத்தியக்காரன் என்று கூறுவீர்கள். ஆனால் இந்த நாட்களில் ஒன்றில் நீங்கள்

கண்டு கொள்வீர்கள். நான் முன்பு சென்ற பாதையில் தான் நீங்கள் இப்பொழுது சென்று கொண்டிருக்கிறீர்கள். நான் கூறு வது சரியென்று நீங்கள் அறிந்து கொள் வீர்கள். ஆம், ஐயா.

84. பாவ அறிக்கை செய்யும் அறை களில் வாலிபப் பெண்கள் அவமானப் பட்டு வருவதை நான் எத்தனை முறை கண்டிருக்கிறேன், அந்த இழுக்கான பெயர் அவள் மரிக்கும் வரைக்கும் அவளுடன் தங்கியிருக்கும் - அவள் கூறினவை. ஒரு காலத்தில் ஒரு அருமையான கிறிஸ்தவ குடும்பத்தில் வளர்க்கப்பட்ட அவள், அந்த பையனுடன் சென்றபோது, இதுதான் நடந்தது. அவன் மிகவும் அழகாக இருந் தான், அவனை விட்டு அவளுக்கு விலகி யிருக்க முடியவில்லை - அப்படிப்

பட்டவை. முதலாவதாக, அவன் சிகரெட்டு புகைப்பவனாயிருந்தான். அவனுடைய பாக்கெட்டில் மது நிறைந்த குப்பி இருந் தது. அவர்கள் குடிக்கத் தொடங்கினார்கள், பிறகு இது தான் சம்பவித்தது. பாருங்கள்? அவள் அவமானம் தாங்காமல் இருக்கி றாள். ஓ, அது மிகவும் பரிதாபகரமானது. இதை இரு சாராரிலும் நீங்கள் காணலாம். எனவே விலகி நில்லுங்கள், பிரிந்து வாருங்கள் எல்லோரிடமும் நல்லவர்க ளாயும் தயவாயும் நடந்து கொள்ளுங்கள், ஆனால் அவர்களுடைய பாவங்களில் பங்கு கொள்ளாதீர்கள். அதை விட்டு விலகுங்கள். ஆம் ஐயா.





இதை அவர்கள் செய்த பின்பும், இயேசு தரையில் உமிழ்ந்து ஒரு மனிதன் பார்வையடையச் செய்ததை குறை கூறுகின்றனர்



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய செய்தியிலிருந்து

# செய்தி: 62-06-03 கடைசிக் கால சுவிசேஷபணி

68. நேற்று நான் நின்று கொண்டு அந்த நீச்சல் குளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். ஞாயிறு பள்ளி ஆசிரியர் ஒருவர் என்னிடம், "இயேசு உமிழ்ந்தார் என்னும் பாகம் வேதத்தில் இருக்கக் கூடாது. இயேசு உமிழ்ந்து சேறுண்டாக்கினார் என்பது சுகாதார விதிகளுக்கு விரோதமான செயல் என்று கூறினதை எண்ணி வியந்தேன்.

இயேசு நின்று கொண்டு குருடனுடன் பேசிக் கொண்டிருந்தார். மூலகிரேக்கு வேதாகமம், "அவர் தரையில் உமிழ்ந்து கொண்டிருந்தார்" என்றுரைக்கிறது. இந்த மனிதனுடன் அவர் பேசிக் கொண்டே

தரையில் உமிழ்ந்து கொண்டிருந்தார், அவர் உமிழந்து முடிந்தவுடன், குனிந்து, தரையிலுள்ள அழுக்குடன் கலந்த உமிழ் நீரை எடுத்து, அவனுடைய கண்களில் தடவி, “போய் சீலோவாம் குளத்தில் கழுவு, உன் கண்கள் திறக்கப்படும்” என்று கூறி அவனை அனுப்பினார். அவன் அந்தப்படியே சென்று கழுவி பார்வை யடைந்தான்.

69. எனவே அந்த ஞாயிறு பள்ளி ஆசிரியர், “அது இந்த காலத்தில் நடக்காது. அது சுகாதார விதிகளுக்கு, ஆரோக்கிய விதிகளுக்கு முரணான ஒரு செயல்'' என்றார். ஆனால் அப்படி கூறின அந்த மனிதன் தன் மனைவியையும் பிள்ளை களையும் நீச்சல் குளத்திற்கு அழைத்து செல்கிறார். அங்கு ஆண்களும் பெண் களும் நீச்சல் அடிக்கின்றனர். பெண்கள்

மாதவிடாயின் போதும் நீச்சல் குளத்தில் குளிக்கின்றனர். சில நேரங்களில் அவர்கள் சிறுநீர் கழிக்க சிறுநீர் அறைக்குச் செல்வ தில்லை. அந்த அழுக்கான உடல்களும், அங்குள்ள அழுக்கும்; அவர்கள் தண்ணீரை வாயில் கொண்டு துப்புகின்றனர் - கண்களும் மற்றவைகளும். இதை அவர் கள் செய்த பின்பும், இயேசு தரையில் உமிழ்ந்து ஒரு மனிதன் பார்வையடையச் செய்ததை குறை கூறுகின்றனர்.

70. அன்றொரு நாள் அந்த நீச்சல் குளத்திலிருந்து ஒரு பையனை அழைத்து வந்தேன். அவன், ''அந்த தண்ணீரை சிறிது குடித்து விட்டேன். எனக்கு வியாதி வரும்போல் உள்ளது. நான் வீட்டிற்கு செல்கிறேன்" என்றான். அவன் ஒருக்கால் இப்பொழுது இங்கிருக்கலாம். அவன் இந்த தெருவில் இரண்டு மூன்று ''பிளாக்கு

கள் தள்ளி வசிக்கிறான். அவனை வீட்டிற்கு அழைத்து சென்றேன். அவன், ''நான் மறுபடியும் அங்கு போகவே மாட்டேன்” என்றான்.

ஆயினும் அதுதான் “நவீன நாகரீகம்” என்றழைக்கப்படுகின்றது. நாம் எந் நிலையை அடைந்துள்ளோம் என்று பாருங்கள். ''கொசுவில்லாதபடி வடிகட்டி ஒட்டகத்தை விழுங்குதல்“ என்னும் பழமொழி போன்று இதுள்ளது, இப் பொழுது அந்த ஞாயிறு பள்ளி ஆசிரியரைக் காண ஆவலாயிருக்கிறேன். பார்த்தீர்களா? இப்படிப்பட்ட காரியங்களை விட்டுவிலகுங்கள்.



# கழுகின் சத்தம்

## மார்ச் 18, 2024



சகோ.வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பேசிய
செய்திகளிலிருந்து